# ‘புழல்’ பெண்கள் பங்களா

“செம்மொழி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக கோவைக்குப் போகிறேன். ரயிலுக்கு நேரமாகிவிட்டது. செய்திகளை சொல்கிறேன் கடகடவென குறித்துக் கொள்ளுங்கள்” என்றார் சாலமன். ‘ஓகே’ என்றபடி நாமும் ரெடியானோம்.

சென்னை சிட்டி போலீஸ் கமிஷனர் ராஜேந்திரனும், சி.பி.சி.ஐ.டி. கூடுதல் டி.ஜி.பி. அர்ச்சனா ராமசுந்தரமும் ஓர் அசத்தலான நடவடிக்கையை எடுத்துள்ளார்கள்”

“என்ன நடவடிக்கை?”

“2009ஆம் ஆண்டு வாக்கில் பங்களாதேஷ் நாட்டைச் சேர்ந்த ஐந்து பெண்கள் விபச்சாரத் தடுப்புப் பிரிவால் கைது செய்யப்பட்டார்கள். இவர்களை சென்னை மயிலாப்பூரில் உள்ள ஹோமில் அடைத்து வைத்திருந்தார்கள். கடந்த பிப்ரவரி மாதம் திடீரென்று ஹோமில் கலாட்டா பண்ணிய அந்தப் பெண்கள், ‘எங்களை எங்கள் நாட்டிற்கு அனுப்பி வையுங்கள். இல்லையென்றால் நாங்கள் தற்கொலை செய்து கொள்வோம்’ என்று மிரட்டி பெரும் ரகளையில் ஈடுபட்டனர். அந்த ஐவரில் சிலர் ஹோமின் கேட் வரை ஓடிச் சென்று தப்பிக்க முயற்சி செய்துள்ளார்கள். இதைத் தொடர்ந்து அவர்கள் மீது கிரிமினல் வழக்குப் பதிவு செய்யப்பட்டு மூன்று மாதங்கள் சிறை தண்டனை வாங்கிக் கொடுத்துவிட்டது சிட்டிப் போலீஸ்.

ஆனால் சிறையில் இருந்து வெளியே வருகின்ற நேரத்தில் இந்தப் பெண்களை எங்கே அனுப்புவது என்ற சிக்கலான சூழ்நிலை உருவானது. அப்போதுதான் கமிஷனர் ராஜேந்திரன் சி.பி.சி.ஐ.டி. கூடுதல் டி.ஜி.பி. அர்ச்சனா ராமசுந்தரத்திற்கு ஒரு கடிதம் எழுதி, ‘இந்த ஐவரையும் பங்களாதேஷுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்’ என்று கேட்டுக் கொண்டார். அதற்குக் காரணம் வெளிநாடு விஷயங்களில் தமிழகப் போலீஸின் கோ-ஆர்டினேட்டர் அர்ச்சனா ராமசுந்தரம்தான்! உடனே ராமசுந்தரம் வேகமாக செயல்பட்டார். மத்திய அரசுக்கு இதுபற்றிக் கடிதம் எழுதி பங்களாதேஷ் நாட்டிடமிருந்து ‘இந்தப் பெண்களை பெற்றுக் கொள்கிறோம்’ என்று ஒப்புதல் கடிதத்தையும் வாங்கினார். இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இந்த ஐந்து பெண்களையும் பங்களாதேஷுக்கு அழைத்துச் சென்றார்கள் தமிழகப் போலீஸார். சென்னை விபச்சாரத் தடுப்புப் பிரிவு இன்ஸ்பெக்டர் ஒருவரும், சி.பி.சி.ஐ.டி. இன்ஸ்பெக்டர் ஒருவரும் அந்த போலீஸ் டீமில் இருக்கிறார்கள். இந்திய-பங்களாதேஷ் எல்லையில் உள்ள இன்டக்ரேட்டட் செக் போஸ்டில் இருக்கும் எல்லைப் பாதுகாப்புப் படையின் டி.ஐ.ஜி.யிடம் புதன் கிழமையன்று இப்பெண்கள் அனைவரும் ஒப்படைக்கப்பட்டனர் என்று தகவல். புழல் ஜெயிலில் இருந்த அப்பெண்கள் இப்போது பங்களாதேஷ் நாட்டில் சுதந்திரப் பறவைகள். ‘சென்னை மாநகரப் போலீஸ் வரலாற்றில் மட்டுமின்றி, தமிழகப் போலீஸ் வரலாற்றிலும் இப்படி விபச்சாரத்தில் சிக்கிய வெளிநாட்டுப் பெண்களை அந்நாட்டிற்கே பத்திரமாக அனுப்பி வைத்தது இதுதான் முதல் தடவை’ என்று சீனியர் போலீஸ் அதிகாரிகள் வட்டாரத்திலேயே பரபரப்பான ‘டாக்’ ஆக இருக்கிறது”

“ஆஹா.... இது உண்மையிலேயே சாதனைதான்... உலகத் தமிழ் மாநாடு குறித்து ஏதேனும் செய்தி உண்டா?”

“சொல்கிறேன். இந்த மாநாட்டிற்காகக் கட்சிக்காரர்களைப் பெருமளவில் அழைத்துச் சென்றுள்ளார்கள் அமைச்சர்கள். அதுவும் சில ஏரியா அமைச்சர்கள் கட்சித் தொண்டர்களை அழைத்துச் சென்றதோடு மட்டுமின்றி அவர்களுக்கு தலா 500 ரூபாய் செலவுக்கும் கொடுத்துள்ளார்களாம். அதே நேரத்தில் சென்னை உள்ளிட்ட மாவட்டங்களில் சில கட்சி நிர்வாகிகள், ‘எங்கள் மாவட்ட செயலாளர் எதுவும் செய்யவில்லை. மாநாட்டிற்கு இங்கிருந்து ஆட்களைக் கூட்டிச் செல்ல வேண்டும்’ என்று கூறி கடைகளில் வசூல் வேட்டை வேறு நடத்தியுள்ளார்களாம். மாவட்ட செயலாளர்கள் எதுவும் செய்யவில்லையா? அல்லது இந்த நிர்வாகிகளே ஒரு வசூல் வேட்டை நடத்தி விட்டார்களா என்று தெரியவில்லை. கெடுபிடி வசூல் பற்றி வணிகர் சங்கத் தலைவர்களுக்கும்

